உ

தண்டபாணி துணை.

சுப்பிரமண்ணியர் தியானம்

என்ற

# ஆண்டிப் பண்டாரம்

பாட்டும்

## முக்கிய திருப்புகழும்

இவை

முத்தமிழ் க்ஷேத்திர வித்வரத்தினம்

**A. S. சதாசிவதாஸவர்களால்**

தொகுக்கப்பெற்றன.

மதுரை

புதுமண்டபம் புத்தகவியாபாரம்

**T. கிருஷ்ணசாமி பிள்ளை**

வெளியிட்டது.

1921.

ரிஜிஸ்டர் காப்பிரைட்.

...லை] [அணா ஒன்று

ஸ்ரீஜ்ஞானசம்பந்த விலாஸ் பிரஸ், மதுரை.

Q26:417
N21;1
170323

வெளியாகிவிட்டது! வெளியாகிவிட்டது!

உலகப்பிரசித்திபெற்ற கன்னிச்சமின் சரபம்

# உடுமலை முத்துசாமிக் கவிராயரவர்கள்

## மாணுக்கரும்

இடையகோட்டை ஜமீன் சமஸ்தான வித்துவானும் ஆகிய பாலகவி

**R. K. பூமிபாலகதாஸ் அவர்களால்**

இயற்றப்பெற்ற

# இந்து தேசாபிமானிகள்

# "செந்தமிழ்த் திலகம்"

என்னும் பக்திரசக் கீர்த்தனைகள்.

(ஆப்டோன் படங்களுடன் கூடியது.)

இதில் பாரதமாதா, சுவாமி விவேகானந்தர், ஸ்ரீபாலகங்காதர திலகர், மகாத்மா காந்தி, அலிசகோதரர், தாதாபாய் நௌரோஜி, லாலா லஜபதிராய், டாக்டர் வரதாராஜுலு நாயுடு முதலிய 50 தேசாபிமானிகளின் பேரில் தற்கால நாகரீகவர்ணமெட்டுகளமைந்த அருமையானதும் காதிற்கினியதுமான பாடல்கள் அடங்கியிருக்கின்றன. [விலை அணு ஐந்து.

| | | | |
|---|---|---|---|
| ஷியார் இயற்றிய கருணைரஸக்காவடிச்சிந்து ... ... | 0 | 2 | 0 |
| சந்தச்சரபம் ஷண் ... கதாஸ் அவர்கள் இயற்றிய போட்டா போட்டி கள்ளபாட்டு ... ... | 0 | ௨ | 0 |
| பறையன் பாட்டு என்ற அதிநூதன விகட வேடிக்கைப்பாட்டு | 0 | 1 | 0 |
| சுப்பிரமணியர்தியானம் என்ற ஆண்டிப்பண்டாரம் பாட்டும் திருப்புகழ்ப் பாடல்களும் ... ... ... | 0 | 1 | 0 |
| வளையற்சிந்து ... ... ... ... | 0 | 1 | 0 |
| அண்ணுமலைரெட்டியார் காவடிச்சிந்து ... ... | 0 | 2 | 0 |
| அழகர் வர்ணிப்பு ... ... ... ... | 0 | 1 | 0 |
| கிருஷ்ணவதாரன் வர்ணிப்பு ... ... ... | 0 | 2 | 0 |
| முருகர் ஒயிற் கும்மி ... ... ... | 0 | 2 | 0 |
| தொடுகுறி சாஸ்திரம் ... ... ... | 0 | 2 | 0 |
| கெவுளிசாஸ்திரம் ... ... ... ... | 0 | 2 | 0 |
| பாலாபிஷேகக்காவடிச்சிந்து ... ... ... | 0 | 2 | 0 |
| சிறுத்தொண்டன் கும்மி ... ... ... | 0 | 1 | 0 |

மேற்கண்ட இனுசுகளும் இதர சகலவிதமான புத்தகங்களும் பள்ளிக்கூடப் புத்தகங்களும் நம்மிடம் விலை சரசமாய் நேரிலும் தபால் மூலமாயும் பெற்றுக்கொள்ளலாம். வியாபாரிகளுக்கு பிரத்தியேகமான விலை.

**டி. கிருஷ்ணசாமி பிள்ளை,**
புத்தக வியாபாரம்,
மதுரை.

உ

தண்டபாணி துணை.

# ஆண்டிப்பண்டாரம்பாட்டு.

## காப்பு வெண்பா.

அக்கரமா றானனமா றாமயிலுந் தண்டாயு
தக்கரமீ ராறுடைய சண்முகன்ப—தக்கமலஞ்
சந்ததமுஞ் சிந்தனைசெய் தந்தமுற வந்தருளுந்
தந்திமுகத் தெந்தையின்பொற் றாள்.

(பாண்டவர்தூதா) என்றமெட்டு.

ஆண்டிப் பண்டாரம் உனை
வேண்டிக் கொண்டேனே பழநி ஆ

| | | |
|---|---|---|
| தண்டாமரைமுகனே | சாமிசரவணனே | |
| அண்டாதி தேவர்போற்று | மாறுமுக மாய்விளங்கும் | ஆ |
| பாததரிசனமே | பார்க்கப்பழநிமலை | |
| காதலாயோடிவந்தேன் | கால்வலியைத்தீர்த்திடுவாய் | ஆ |
| பஞ்சவர்க்குத் தூதுசென்ற | பரந்தாமன் றன் மருகா | |
| தஞ்சமெனவேதுதித்தேன் | சங்கடந்தீர் திருச்செந்தூரா | ஆ |
| கதியுன்னை யன்றிவேறு | காப்பவர்களுண்டோகூறு | |
| கதிர்காமந் தன்னில்வாழுங் | கர்த்தனே கடைக்கண்பாரும் | ஆ |
| சிரிப்பாக மயிலின்மீது | தெய்வானை வள்ளியோடு | |
| திருப்பரங் கிரியில்வளர் | தேவர்கள்சே னாபதியே | ஆ |
| கன்னுமா னேந்துவோனின் | காதிலுப தேசித்தவா | |
| குன்றைக் குடிக்குமரா | கோரினேனே நேரில்வாரும் | ஆ |
| சிரிப்பாய்ப் புரமெரித்தோன் | திருநுதலில் வந்தவனே | |
| திருப்போரு ரமராவுமை | செங்கைவே லடைந்தவனே | ஆ |
| ஒருத்தனீ கலிவரதன் | உலகிற்கண் கண்டதெய்வம் | |
| திருத்தணிகை சேவற்கொடி | சேந்தனேநின் துதிவிரதம் | ஆ |
| தந்தைதரு மாங்கனியை | ஜலதியில் முன்வாங்கவேண்டி | |
| சிந்தைமகிழ்ந் தேயுலகைச் | சிகியிலேறிச் சுற்றிவந்த | ஆ |
| கானக் குறத்தியின்மேல் | காதல்கொண்டு இங்கிதமாய் | |
| வேணதினை மாவைத்தின்று | வேங்கைமர மாய்வளர்ந்த | ஆ |
| தந்தைதா யாரிருக்க | தமயனிரு பேரிருக்க | |
| விந்தையதாய் ஆண்டிவேடம் | வேலவாநீ பூண்டதென்ன | ஆ |
| மிக்கபுகழ் பெருகும் | வேலாயு தாகுகனே | |
| தக்கவரமருள்வாய் | தாள்பணிந்து சாற்றினேனே | ஆ |
| கத்திக்கத்தி யழைத்தும் | காப்பதுன் கடமையென்றும் | |
| சித்தமிரங் காததென்ன | சேவைதரா வாரும்வோடி | ஆ |
| கழுகுமலையில் வாழும் | கந்தப்பா சண்முகனே | |
| தொழுதேனே சுப்ரமண்யா | துன்பவினை போக்கவாரும் | ஆ |

புள்ளிமயி லிருக்க — போர்புரிய வேலிருக்க
வள்ளிகுற மாதினைத் தேடி — வனம்போன காரணமேன் — ஆ
கல்கட்டு வீடிருக்க — கனத்தபணி மணியிருக்க
மல்கட்ட வேடாண்டை — மால்மருகா போனதென்ன — ஆ

## விருத்தம்.

பாரதனில் யான்கொடிய பாவியா னாலுமென்
　　பத்திசா திக்க விலையோ
பண்டுன்றன் றொண்டரில் யாமொருவ னல்லவோ
　　பாடிப்ப ணிந்தி றைஞ்சி
வாரத்திற் கோர்சோம வாரமுன் கோவில்கிரி
　　வலஞ்சுற்றி வந்து முந்தன்
மகதெரிச னைகண்டு மகமகிழ்ந் தினியதுதி
　　வழுத்தியும் வணங்க விலையோ
தாரணிபுயாசுர சம்மார னே ஞான
　　சம்பந்த னை திருவே
சத்துச்சித் தாயன்பி னித்யப்பிர் மானந்த
　　சமரச குமார குருவே
ஆரணிசுதா முமத வாரணன்ச கோதரா
　　அய்யனே மெய்ய னே கா
அரஹர தவாமகா சரஹணபவாகுகா
　　ஆறுமுக மானவடிவே.

## கட்டளைக் கலித்துறை.

சிரார் தரும்பொழிற் சூழ்ந்திடுஞ் க்ஷேத்ரச் சிரகிரியிற்
பாரோர் தினமும்பரவிப் புகழ்தண்ட பாணியென
நேரார்ந் திலங்கியருளே பொழியு நினதடியிற்
றூராம் பசுந்தமிழ்ச் சாற்றினே னெற்கருள் சண்முகனே

## ஷ்டி துதி.

பாலம்கே நாக்காய்-என்ற வர்ணமெட்டு.

## பல்லவி.

பண்டாரக் கந்தவேல்
பண்டாரக் கந்தவேல்
பழனுபுரித்தண்ட — பாணிவேல் (பண்)

## அநுபல்லவி.

தண்டலையும் வாவிகளுஞ் — சார்ந்த சிரகிரியில்
அண்டர்களும் போற்றவாழும் — அப்பனேவா அய்யனேவா
　　ஆறுமுகமான — ஆண்டிப் (பண்)

## சரணங்கள்.

முத்திக்கு வித்தான — மோனபரஞ் சுடரே
அத்திக் குத்தம்பியான — அப்பனேவா அய்யனேவா
　　ஆறுமுகமான — ஆண்டிப் (பண்)

பாடிப்பணிந்திறைஞ்சிப் பக்தியுடன் துதித்தேன்
ஆடும்மயின்மீதேறி அப்பனேவா அய்யனேவா
ஆறுமுகமான ஆண்டிப் (பண்)
தொண்டரில் யாரொருவன் சொல்லுமுறை கேளாதேனே
அண்டருலகாளேபாளா அப்பனேவா அய்யனேவா
ஆறுமுகமான ஆண்டிப் (பண்)
நம்பினே னுன்பதமே நாயே னெனக்கிதமே
அம்பிகையாள் சுதனே அப்பனேவா அய்யனேவா
ஆறுமுகமான ஆண்டிப் (பண்)
தஞ்சமுன இருதாள் சதாசிவன் முறைகேள்
அஞ்சலி செய்தேனென்றும் அப்பனேவா அய்யனேவா
ஆறுமுகமான ஆண்டிப் (பண்)

மஞ்சுநிகர் குந்தளமின்னே—என்ற
காவடிச்சிந்து வர்ணமெட்டு
பல்லவி.

(1) தாவடந்தந்தென்னைநீவிடடி — பண்டாரமான
சண்முகவடிவேலனடி

அநுபல்லவி.

மாவடிவத் தேவயானை
வள்ளிமண வாளனென்பேர்
தேவாடி யாளேகேளாய்
சிவசுப்ர மண்யனடி (தாவடம்)

(2) ஆரவாரங்கோழிகூவுதே — திருவனந்தல்
ஆரம்ப நேரமுமாகுதே
சீர்பெறு மடியவர்கள்
சிந்தனை செய்யப்புகழ்ந்து
நேருருள் பொழியுஞ்சோம
வார கார்த்திகேயனடி (தாவடம்)

(3) வெள்ளியுமுதயமாச்சுதே — அடியாளான
வள்ளிதேடும்வேளையாச்சுதே
அள்ளியேவி பூதிதாரேன்
அடியேசும் மாவிடடி
தெள்ளுதமி ழுக்குதவும்
திருச்செந்தூர் வேலன்யானடி. (தாவடம்)

(4) பூவல்மேவுஞ்சேவல் தேடுதே — ஜோதிமிகுந்த
புள்ளிமயில் துள்ளியாடுதே
கோவிற்திருக் காப்புமிட்ட
குருக்கள்தாள் திறக்குமுன்னே
பாவையேநா னேவிரைவிற்
பள்ளியறை சேரவேணும் (தாவடம்)

(5) குங்குமம் சவ்வாதுப்பூச் சுக்கும் — பொட்டிட்ட நெற்றி
கொச்சிமஞ்சள் வாடைவீச்சுக்கும்
மங்கையே நீ வள்ளியைப்போல்

# ஆண்டிப்பண்டாரம் பாட்டு

வல்லமைக் காரியேயானால்
என்கைவேலிதை யீடுவைத்து
இரண்டுபேவுன் வாங்கித்தாரேன் (தாவடம்)

(6) பூசிக்கும் தொண்டர்கள் சஞ்சாரம் — புல்லொலியுற்ற
புட்பங்கள் மலர்ந்ததி ந்நேரம்
நேசிக்கும் அர்ச்சனைசெய்வார்
நேரம்போக் குவதுமேனோ
வேசிக்குள்யா ளுசைகொண்டதுங்
காசுக்கோ ரழகுமில்லை (தாவடம்)

ஆண்டிப்பண்டாரம் என்ற வர்ணமெட்டு.

தாண்டவப்பாதா யெனை
யாண்டருள் நீதா தில்லைத் தா

1. பாண்டு குமாரர்களாம் பஞ்சவர்களிலொருவன்
காண்டீபனுக்கருளுங் கால கால சூலா தில்லைத் தா
2. அறுபத்து மூவர்முதல் அமரர்களும்பணிய
அறுபத்து நான்குவினை யாட லாடுங் கூடல் வளர் தா
3. சிறுத்தொண்ட னற்றவத்திற் செனித்துற்ற வாண்மகவை
அறுத்துண்டிடப் புகுந்தும் அன்பளித்த யெய்பிரானே தா
4. பஞ்சாக்ஷரப்படையோய் பண்பாரு மாவிடையோய்
மஞ்சாடு மாதுமையை வாம பாக மாகக் கொண்ட தா
5. அரியயனு மறியா தடிமுடியை யமைத்தாய்
நரியைப்பரியாக்கிய நந்தி நண்பா வந்தருள்செய் தா
6. கோட்டானை யானனத்தன் கூறுமூலாதாரத்தின்
வீட்டானை முன்பயந்த விமல வமல வமுத கமல தா
7. பாட்டாண்டி வேசைமகன் பகராண்டி யாறுபடை
வீட்டாண்டி தந்தையுன்முன் விளம்பு முளம்பு கழும்பி ரணவத் தா
8. பத்தர் துதிக்கிரங்கும் பண்பாபரா சிவமே
சத்துச்சித்தாய் நிறைந்த சர்ப்பாபரண யாதவமே தா
9. மாமன் றலையறுத்தாய் மாபுரமூன் றெரித்தாய்
காமன் றனைத்தகித்தாய் காமி வாமி பூம னேம தா
10. மார்க்கண்டனை யணைத்து மறலியைத்தானுதைத்தீர்
காக்குங் கடனுமது கருணை புரியத் தருணமிதுவே தா
11. மிடியகற்றி யாளவென மேதினியிலெவ்வுயிர்க்கும்
படியளக்கப் பரையுடனே பவனிவந்த சிவமயமே தா
12. மதுரம் வடிவேற்சாமி மாணுக்கர் களிலொருவன்
நதிகுலச் சதாசிவன் நம்பி டும்ப ரம்பொருளே தா

நாதந்தி நாதந்தி நா என்றவர்ணமெட்டு.

தண்டாயுதத் தெய்வமே பழனுபுரித் தண்
அண்டர் தொழும்ஆண்டிப் பண்டாரமே பக்தர்
கொண்டாடு மாசைவமே அப்பனுன்சேவை
கண்டானந்த முய்வமே பழனுபுரித் தண்
சிந்தா னந்தா வந்தா ளுந்தா னெந்தை ஞானக்
கந்தாகதிர் வேலனே சடைக்கணருட்
தந்தாளுமை பாலனே பழனுபுரித் தண்

ஏதெந்தன் மீதிந்த வாதுந்த காதுந்தன்
பாதந்தஞ்சம் பாடினேன் பத்திலசப
சாதம்பெற நாடினேன் பழனிபுரிந் தண்
மாவடியா ராவலாயுன் கோவில்கிரி மேவியபாற்
காவடிநின்றுடுஞ் சூட்சமே கருணை தருஞ்
சேவடிகண்டாலு மோட்சமே பழனிபுரித் தண்
பெண்கொண்ட இல்வாழ்விற் புண்கொண்ட லைவதனங்
கண்கண்ட காட்சியாமே பிரமாணத்தப்
பண்கண்ட மாட்சியாமே பழனிபுரிந் தண்
முத்திக்கு வித்தான சித்திக்கு ரித்தான
சித்தத்தாருந்தி யானமே சதாசிவன்பண்
பத்திக்காகுமோ னமே பழனிபுரித் தண்

## முருகன் திருமால்மருகன் பெருமை என்ற வர்ணமெட்டு.

இராகம்-அடாணா—தாளம் ரூபகம்.

### பல்லவி.

யார்தானுனையே மதிப்பாரையனே வீணில்
ஆண்டிபோலவேடம் பூண்டுதிரிந்தாலும் (யார்)

### அநுபல்லவி.

பாரோர்புகழ் பழனிக்குமரப்
பட்டமதைத் தரித்தாயினித்
திட்டநடத் தைதனைவிடுவிடு (யார்)

### சரணங்கள்.

பந்தமி குந்துன்னைச் சந்ததந் தேடிடும்
பக்தர்களை மறந்தாய் நாளும்
பாவையர்பாலுளத் தாலனுடைத்துறப்
பராமுகமே சிறந்தாய்
குந்தனருந்தவக் குஞ்சரியை மட்டுங்
கூடிச்சுகித் திருந்தாய் பின்பு
கூடகமேனே குலத்தைக் கெடுத்திடுங்
கோடரிபோல் நிறைந்தாய்
கொந்தளமாமுனி கூறியமடந்தை
குணமாய்கையி லினிதாகியே தினைமேவிய வனவேடுவா (யார்)
தழைத்தவ்வனத்தினிற் செழித்தவிருக்ஷம்போற்
றான்பயந்தோடி நின்றாய் ஆதிச்
சைவக்கொக்குபோன்ற செய்கையீதேதுகாண்
சமர்த்திதுயோலுங் கொண்டாய்
கிழத்தனமாகியும் வழக்கெடுத்தோதியுங்
கெஞ்சிமொழி புகன்றாய் என்ன
கேவலப்புத்தியிப் பூவுலகோரிதைக்
கேட்டும்நகையா ருண்டா
பிழைத்தபிழைப்பிற்குப் பெண்டாட்டியுமிரண்டா
பேணிடு மோனருத்ராக்கப் பூணைபோலானதைக்கண்டால் (யார்)

நதிகுலசேகரன் மதியொகோன்மாதி
நடித்திடும்தமிழ்ப் பூமி திரு
னாமச்சதாசிவ சாமிக்கிதாகிதம்
நவிலும்வித்வ க்ஷேமி
மதியுனாதுநெஞ்சின் மானபிமானமும்
மறந்தனையோ காமி புத்தி
மாவெனன்றனைமெச்சித் தானன்றான்விஞ்சை
வழுத்தென்றரோ சுவாமி
புதிதுபுதிதுனைப் போலப்படுகாமி
புவனத்திலு மிலையித்ததி தவசித்தமாய் மலையுற்றவா (யார்)

## அருணகிரிநாதர் முக்கிய திருப்புகழ்.

ஏறுமயிலேறி விளையாடுமுக மொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடியார்கள் வினைதீர்க்குமுக மொன்றே
குன்றுருவவேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடுசூரரை வதைத்தமுக மொன்றே
வள்ளியைமணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுகமான பொருணீ யருளல் வேண்டும்
ஆதியருணாசல மமர்ந்த பெருமானே.

### வேறு

மருவே செறித்த குழலார் மயக்கின்
மதனாகமத்தின் விரகாலே
மயலே யெழுப்பி யிதழேயருத்து
மலைநேர் முலைக்கு ளுறவாகி
பெருகாதலுற்ற தமியேனை நித்தம்
பிரியாத பட்ச முடனேயென்
பிழையே பொறுத்து னிருதாளி லுற்ற
பெருவாழ்வு பற்ற வருள்வாயே
குருவா யரற்கு முபதேசம் வைத்த
குகனே குறத்தி மணவாளா
குளிர்கான் மிகுத்த வளர்போத முற்ற
குடகா விரிக்கு வடபால்வாழ்
திருமா றனக்கு மருகா வுமைக்கோர்
சிறுவா கரிக்கு மிளையோனே
திருவே ரகத்தி லுறைவா யரக்கர்
சிரமே துணித்த பெருமானே

## வேறு.

வங்கார மார்பிலணி தாரொாடுயர் கோடசைய
கொந்தார மாலைகுழ லாரமொடு தோள்புரள
வண்காதிலோலை கதிர் போலவொளிவீசயிதழ் மலர்போல

மஞ்சாடு சாபனுதல் வாளனைய வேல்விழிகள்
கொஞ்சார மோககிளி யாகநகை பேசியுற
வந்தாரை வாருமிரு நீருறவெ னுசைமைய விடுமாதர்

சங்காளர் சூதுகொலை காரர்குடி கேடர்கழல்
சிங்கார தோளர்பண ஆசையுளர் காதியிலர்
சண்டாளர் சீச்சியவர் மாயவலையோடடிய னுழலாமல்

சங்கோதை நாதமொடு கூடிவெகு மாயையிருள்
வெங்கோடமூல அழல் வீசவுப தேசமது
தண்காதி லோதியிரு பாதமலர் சேரஅருள் புரிவாயே

சிங்கார ரூபமயில் வாக நமோ நமென
கந்தா குமாரசிவ தேசிக நமோ நமென
சிந்தூர பார்வதி சுதாகர நமோ நமென வருகோதை

சிந்தான சோதிகதிர் வேலவ நமோ நமென
கங்காள வேணிகுரு வானவ நமோ நமென
திண்சூர ராழிமலை தூள்படவை வேலையிடு முருகோனே

இங்கீத வேதபிர மாவைவிழ மோதியொரு
பெண்காத லோடுவன மேவிவளி நாயகியை
இன்பானதேனிரச மார்முலைவி டாதசர மணிமார்பா

எண்டோளர் காதல்கொடு காதல்கறி யேபருகு
செங்காடு மேவிபிர காசமயில் மேலழகொ
டென்காதல் மாலைமுடி ஆறுமுகவாவமரர் பெருமானே

## வேறு.

இசைந்த யேறும் கரியுரி போர்வையும் எழில்நீறும்
இலங்கு நூலும் புலியுடை யாடையு மழுமானும்

அசைந்த தோடும் திங்களு மாலையு முடிமீதே
அணிந்த யீசன் பரிவுட னருளிய குருநாதா

உசிந்த சூரன் கிளையுடன் வேரற முனைவோனே
உகந்த பாசக் கயிறொடு தூதர்கண் மெவியாதே

அசந்தபோதென் றுயர்கெட மயில்மிசை வரவேணும்
அமைந்த வேலும் புயமிசை மேவிய பெருமானே

### வேறு.

நாவேறு பாமணத்த பாதார மேவிணைத்து
நாலாறு நாலுபற்று வகையான

நாலாறு மாகமத்தி னூலாய ஞானமுத்தி
நாடோறு நானுரைத்த நெறியாக

நீவேறெ னாதிருக்க நான்வேறெ னாதிருக்க
நேராக வாழ்வதற்கு னருள்கூற

நீடார் சடாதரத்தின் மீதேப ராபரத்தை
நீகாணெ னாஅனைச்சொ லருள்வாயே

சேவேறு மீசர்சுற்ற மாஞானபோதபுத்தி
சீராகவே யுரைத்த குருநாதா

தேரார்கள் நாடுசுட்ட சூரர்கள் மாளவெட்டு
தீராகு காகுறத்தி மணவாளா

காவேரி நேர்வடக்கி லேவாவி பூமணத்த
காவார்சுவாமி வெற்பின் முருகோனே

கார்போலு மேனிபெற்ற மாகாளிவாலைசத்தி
காமாரி வாமிபெற்ற பெருமாளே.

### வேறு.

சரணகம லாலயத்தை யரைநிமிஷ நேரமட்டில்
தவமுறை தியானம்வைக்க யறியாத

சடகசட மூடமட்டி பவவினையிலே ஜெனித்த
தமியன்மிடியால் மயக்க முறுவேனோ

கருணைபுரியாதிருப்ப தெனகுறையி வேளைசெப்பு
கயிலைமலை நாதர்பெற்ற குமரோனே

கடகபுயமீதிரத்ன பணியணி பொன்மாலைசெச்சை
கமழுமண மார்கடப்ப மணிவோனே

தருணமிதை யாமிகுத்த கனமதுறு நீள்சவுக்ய
சகலசெல்வ யோகமிக்க பெருவாழ்வு

தகைமை சிவஞானமுத்தி பரகதியு நீகொடுத்து
தவிபுரிய வேணுநெய்த்த வடிவேலா

அருணதள பாதபத்ம மனுதினமு மேதுதிக்க
அரியதமிழ் தானளித்த மயில்வீரா

அதிசயமநேகமுற்ற பழநிமலை மீதுதித்த
அழகதிருவே ரகத்தின் முருகோனே.

ஆண்டிப்பண்டாரமும் திருப்புகழும்
முற்றிற்று.

புலவர்கள் புகழ்ப்பெற்ற

முத்தமிழ் சுதந்திர வித்வரத்தினம்

## A. S. சதாசிவதாஸவர்கள் இயற்றிய

இந்து தேசாபிமானிகள்

# ஜீவிய செந்தமிழ்த் திலகம்

(ஆப்டோன் படங்களுடன் கூடியது.)

இது மஹாத்மா காந்தி, லோகமான்ய பாலகங்காதர திலகர், தாதாபாய் நௌரோஜி, லாலா லஜபதிராய், டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு, டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன், சேலம் சக்கரவர்த்தி வி. ராஜகோபாலாசாரி, (மகமதலி அண்டு ஷௌகதலி) அலி சகோதரர் முதலிய தேசபக்தர்களின் வாழ்நாட்களைப் (பிறப்பு வளர்ப்புகள்) பற்றிய தற்கால நாகரீக வர்ணமெட்டுகளமைந்த பாடல்களாலும், பாரதமாதா, வந்தேமாதரம், ஜேய்-ஜேய்-ஜேய் முதலிய மங்கள வாழ்த்துப் பாடல்களாலும் அலங்கரிக்கப் பெற்றிருக்கிறது.

இப்பரத நாட்டில் உதித்து தேச நன்மைக்குத் தொண்டுசெய்யும் பக்தர்களின் தீர்ச்செயல்களை, பாடப் பாடத் தேசபக்தி மேலிடக் கூடியதும், காதிற்கினிமையானதும் படிக்கப் படிக்கத் தெவிட்டாது மறுமுறை படிக்கச் செய்வதுமான செந்தமிழ்ப் பாடல்கள் மூலம் தெரிந்துகொள்ள இதுதான் நற்சமயம். [விலை அணா நான்கு.

## ஷையார் இயற்றிய பக்தியானந்தத்திரட்டு என்னும்

# கீர்த்தனப் பதங்கள்.

நேயர்களே! கவனியுங்கள்! நம் தமிழ் நாடெங்கும் பற்பல புதிய பக்திரசக்கீர்த்தனங்கள் வெளிவந்து உலாவுகின்றன. எனினும் முக்திக்காக சதா சிந்திப் பக்திபுரிவோர்களுக்கும், பாட்டில் சிறந்த நாடகப்பிரியர்களுக்கும், சங்கீதக்கச்சேரிகளுக்கும் இன்பம் விளைவிக்கும் இந்துஸ்தான், சிந்து, திருப்புகழ், சந்தம், பார்ஸிமுதலான தற்கால நாகரீகவர்ணமெட்டுகளடங்கியதும், யாவரும் எளிதில் தெரிந்துகொள்ளக் கூடியதும், பாடப் பாடப் பரவசமுறுத்துவதும், கேட்கக் கேட்கச் செவிக்கின்பம் தரக்கூடியதும், தமிழ் நாடெங்கும் உலாவிவரும் பாடல்களில் சிறந்ததும், மகிமைபெற்றதும், முதன்மையானதுமான பாடல்கள் அடங்கியுள்ள புத்தகம் இதுதான்! இதுதான்! இதிலடங்கிய வர்ணமெட்டுகளின் நவரசமும் பாடல்களின் பெருமையும் இப்புத்தகத்தை வாங்கி வாசிக்கும் நேயர்களுக்குத்தான் நன்குவிளங்கும். புத்தகத்திற்கு முந்துங்கள். சொற்பகாப்பிகள் தான் தயாராகின்றன. [விலை அணா ஐந்து.

## டி. கிருஷ்ணசாமி பிள்ளை,

புத்தக வியாபாரம்,

புதுமண்டபம், மதுரை.

அச்சிலிருக்கிறது!  எதிர்பாருங்கள்!!

புலவர்கள் புகழப்பெற்ற முத்தமிழ்க்ஷேத்திர வித்வரத்தினம்

**A. S. சதாசிவதாஸ் அவர்களியற்றிய**

| | | | |
|---|---|---|---|
| சத்தியவான் சாவித்திரி சரித்திரம் 1ம் பாகம் ... ... | 0 | 2 | 0 |
| ,, ,, 2ம் பாகம் ... ... | 0 | 2 | 0 |
| இராஜாம்பாள் சரித்திரம் ... ... ... | 0 | 4 | 0 |
| அல்லிராணிசரித்திரம் 1ம் பாகம் ... ... ... | 0 | 2 | 0 |
| ,, 2ம் பாகம் ... ... ... | 0 | 2 | 0 |
| வள்ளியம்மை சரித்திரம் ... ... ... | 0 | 4 | 0 |
| சகுந்தலாசரித்திரம் ... ... ... ... | 0 | 4 | 0 |
| அதிரூப அமராவதிசரித்திரம் ... ... ... | 0 | 4 | 0 |
| லலிதாங்கி சரித்திரம்... ... ... ... | 0 | 4 | 0 |
| மதுரை மீனாக்ஷியம்மன் கலியாணம் ... ... | 0 | 2 | 0 |
| தேசாபிமானிகள் திருப்புகழ்க் காவடிச்சிந்து ... ... | 0 | 2 | |
| பக்தி ஆனந்தக் கேலிப்பதங்கள் ... ... ... | 0 | 5 | |

துப்பறியும் இனிய தமிழ் நாவல்கள்

| | | | |
|---|---|---|---|
| **தசரதி அல்லது மங்களாபுர இரகசியம்** | **0** | **10** | **0** |
| நாகரத்தினம் அல்லது விஷக்குண்டூசி ... ... | 0 | 12 | 0 |
| கமலநாதன் ... ... ... ... | 1 | 4 | 0 |
| ஆனந்தபத்மினி அல்லது அஞ்சனக்கோட்டையின் அதிசயங்கள் | 0 | 10 | 0 |
| அதிசயப்பொக்கிஷம் ... ... ... | 1 | 8 | 0 |
| புஷ்பாவதி ... ... ... ... | 0 | 10 | 0 |
| கண்ணம்மாள் அல்லது கண்டதும் காதல் ... ... | 0 | 8 | 0 |
| அம்புஜவிலாசத்தின் அதிசயச்சம்பவம் ... ... | 0 | 8 | 0 |
| நீலரேகை ... ... ... ... | 1 | 0 | 0 |
| பாலாமணி அல்லது பக்காத்திருடன் ... ... | 2 | 0 | 0 |
| அன்பானந்தன் ... ... ... ... | 1 | 0 | 0 |
| சுந்தரிமனோகரன் ... ... ... ... | 1 | 0 | 0 |

மேற்கண்ட நாவல்களும் இதர சகலவிதமான நாவல்களும் சகாய விலைக்கு நம்மிடம் கிடைக்கும்.

பாரதமாதா படம் 0—0—6. } 0—1—6 ஸ்டாம்பு அனுப்பினால் தபா
காந்தி-திலகர் படம் 0—0—6. } வில் அனுப்பப்பெறும்.

**டி. கிருஷ்ணசாமி பிள்ளை,**
புத்தக வியாபாரம்,
புதுமண்டபம், மதுரை.